இணைப்பு II

[341-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

எழுதுபொருள்-அச்சுத்துறை பணி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு.

அச்சகங்கள், எழுதுபொருள் பிரிவு என்ற இரு பெரும் பிரிவுகளைக் கொண்டு எழுதுபொருள்-அச்சுத் துறை இயங்கி வருகிறது. எழுதுபொருள்-அச்சுத் துறை இயக்குநர் இத் துறையின் 'தலைவராவார்'. இயக்குநருக்கு உதவியாக, நிர்வாகம் சம்பந்தப்பட்டவற்றில் துணை இயக்குநரும், அச்சகம் சம்மந்தப்பட்டவற்றில் பொது மேலாளரும், கணக்குகளைப் பொறுத்தவரையில், தலைமைக் கணக்கு அலுவலரும், எழுது பொருள் கிடங்கைப் பொறுத்தவரையில் உதவி இயக்குநரும் உள்ளனர். தவிர சென்னையில் அண்ணா சாலையிலுள்ள, அரசு வெளியீடுகள் விற்பனை நிலையம் இத் துறையின் கீழ் ஓர் உதவி இயக்குநரின் பொறுப்பில் உள்ளது.

1.2. எழுதுபொருள்-அச்சுத் துறை இயக்குநர் அலுவலகம் அண்ணா சாலையில் இயங்கி வருகிறது. இதில் 220 பணியாளர்கள் உள்ளனர். இயக்குநர் அலுவலகம், சென்னையிலுள்ள நான்கு அச்சகங்களையும், வெளியூர்களில் உள்ள ஐந்து அச்சகங்களையும், எழுதுபொருள் கிடங்குகளையும் நிர்வகித்து வருகிறது.

2. அச்சுப் பிரிவு பின்வரும் பகுதிகளைக் கொண்டது—

1. மத்திய அச்சகம், வள்ளலார் நகர், சென்னை.
2. உயர் நீதிமன்ற வளாகத்திலுள்ள கிளை அச்சகம், சென்னை.
3. மத்திய சிறைச்சாலையிலுள்ள கிளை அச்சகம், சென்னை.
4. சூளை பகுதியில் ஆனைக்காரன் தோட்டத்திலுள்ள கிளை அச்சகம், சென்னை.
5. புதுக்கோட்டையிலுள்ள கிளை அச்சகம்.
6. திருச்சிராப்பள்ளியிலுள்ள வட்டார அச்சகம்.
7. சேலத்திலுள்ள வட்டார அச்சகம்.
8. விருத்தாசலத்திலுள்ள வட்டார அச்சகம்.
9. மதுரையிலுள்ள வட்டார அச்சகம்.

[1980 ஜூலை 22

3.1. மைய அச்சகம், சென்னை.— மைய அச்சகம் பணி மேலாளரின் நிர்வாகத்தின்கீழ் 3,525 நிலையான பணியாளர்களைக் கொண்டு 3 முறை மாற்றுப் பணியில் செயல்பட்டு வருகிறது. இப்பிரிவில், 75 உடல் ஊனமுற்றவர்களும், 242 மகளிர் பணியாளர்களும், 231 வேலை பழகுபவர்களும் பணியாற்றி வருகின்றனர். இவர்களில் உடல் ஊனமுற்றோர் 23 பேரும், டிப்ளமாதாரர்கள் 45 பேரும் அடங்குவர். இவர்கள் 1961-ம் ஆண்டு (Apprenticeship Act, 1961) வேலை பழகுபவர் சட்டத்தின்படி வேலை பழகி வருகிறார்கள். இவ்வச்சகத்தில் 55 அச்சு இயந்திரங்கள், 21 வரி அச்சு இயந்திரங்கள் (Lino Composing Machines), 10 தனி அச்சுப் பலகணிகள் (Mono Type Keyboards), 32 தனி அச்சு வார்ப்புகள், 3 உயர்நிலை அச்சு வார்ப்புக்கள் (Super Casters) உதிரி எழுத்துக்கள் வார்க்கும் இயந்திரம் (Loose Type Casters) புத்தகம் கட்டும் பலவகை இயந்திரங்கள் 53-ம் உள்ளன. தவிர, 5 'ரோடா' அச்சு இயந்திரங்கள், பட அச்சு, ஒளிப் படக் கருவி ஒன்றும், பட அச்சு தயாரிக்கும் பிற சாதனங்களும், ஆப்செட் தட்டுகள் (Plate Making) செய்யும் சாதனங்களும் அமைந்துள்ளன.

இதைத் தவிர இவ்வாண்டு பின்வரும் இயந்திரங்கள் புதிதாக வாங்கப்பட்டு நிறுவப்பட்டுள்ளன:—

1. சாணை பிடிக்கும் இயந்திரம்	..	1
2. உறை துளையிடும் கருவி	..	1
3. புரூப் இயந்திரம் (Proof Press)	..	1
4. கையால் எண்ணிக்கை இடும் பெட்டிகள்		119
5. ஜெர்மன் தயாரிப்பு இயந்திர எண்ணிக்கை இடும் பெட்டிகள்.		199
6. இயந்திர எண்ணிக்கை இடும் பெட்டிகள்		200
7. கம்பி கொண்டு தைக்கும் இயந்திரம் (Wire Stitching Machine Single Head).		4

நிலைப் படிவங்கள், நிலைப்படுத்தப்படாத படிவங்கள் ஆகியவற்றை அச்சடிப்பதோடு மைய அச்சகம் அரசு தலைமைச் செயலகத்தின் பல்வேறு துறைகள், துறைத் தலைவர்கள், தமிழ்நாடு மாநிலக் கணக்குத் துறை ஆய்வுத் தலைவர் போக்குவரத்துக் கழகங்கள், பால்வள நிறுவனம், உள்ளாட்சி மன்றங்கள், ஊராட்சி, நகராட்சி முதலியவைகளால் தரப்படும் அச்சுப் பணிகளையும் ஆற்றி வருகிறது.

1980 ஜூலை 22]

மைய அச்சகம் செய்து முடித்துள்ள முக்கிய பணிகளில் சில வருமாறு:—

1. வரவு-செலவுத் திட்ட ஆவணங்கள்.

2. வாராந்திர தமிழ்நாடு அரசிதழ், தமிழ்நாடு சிறப்பு அரசிதழ்கள்.

3. பரிசுச் சீட்டுகள் (50 வரிசைகள் கொண்ட ஐந்து கோடி சீட்டுகள்).

4. உணவுப் பொருள் பங்கீட்டு அட்டைகள் புதுப்பிக்கும் சீட்டுகளுடன் (இரு நிறங்களில்)—ஒரு கோடி.

5. வாக்குச் சீட்டுகள்.—

(1) பட்டதாரி தொகுதி.

(2) தஞ்சாவூர் தொகுதி, நாகை தொகுதி நாடாளு மன்ற உப தேர்தல்.

(3) 1980-ல் நடந்த மக்களவை மற்றும் சட்டசபை பொதுத் தேர்தல்.

6. பால் வழங்கும் அட்டைகள்.

7. மாணவர்கள், பொதுமக்களுக்கான (பல்லவன் போக்கு வரத்துக் கழக) பேருந்து மாதாந்திர சலுகை அட்டைகள்.

8. மும்மாத நாட்காட்டிகள், சுவர் நாட்காட்டிகள், நாட்குறிப்பேடுகள்— நான்கு வகையில்.

9. பட்டதாரிகள் தொகுதி தேர்தல் பட்டியல்—இறுதித் திருத்தம்—தமிழ்நாடு மேற்கு மத்திய தொகுதி—144 பாகங்கள்.

10. விதிக்கோவைகளும், நடைமுறை நூல்களும்.

11. பல துறைகளின் செய்தி இதழ்கள்.

12. அனைத்துத் துறைகளின் மானியக் கோரிக்கைகள், கொள்கை விளக்கக் குறிப்புகள், வரவு-செலவுத் திட்டம்.

13. அழைப்பிதழ்கள், உறைகள் முதலியன.

14. 1979-80ஆம் ஆண்டுத் திட்டம் நிதி நிலைக் குறிப்பு—திட்ட இணைப்பு (தமிழில்).

TRUTH ALONE TRIUMPHS

15. இரகசியக் குறிப்புகள்.

16. மாநில நிர்வாக அறிக்கைகள் (1977–78)

17. மாவட்ட ஆட்சித் தலைவரின் மாநாடு அறிக்கை, காவல் துறை அலுவலர் அறிக்கைகள்.

18. நீதிபதி கிருஷ்ணசாமி நாயுடு கமிஷன் அறிக்கை—இரண்டு பகுதிகள்.

19. நீதிபதி சதாசிவம் கமிஷன் அறிக்கை— மூன்று பகுதிகள்.

20. வாகைகுளம் துப்பாக்கிச் சூடு பற்றிய நீதிபதி பெல்லி கமிஷன் அறிக்கை.

21. அண்ணா கலை அரங்கம், நுழைவுச் சீட்டு.

22. போக்குவரத்து மற்றும் போக்குவரத்து அல்லாத உரிமச் சீட்டு.

23. ஆசிரியர் தினக் கொடிகள்.

24. மாநிலக் கணக்குத் துறைத் தலைவரின் விரிவுப் புத்தகங்கள்—தொகுப்புச் சுருக்கங்கள்.

25. பெரியார் புரட்சி மொழிகள்.

26. சட்டச் சொல் அகராதி.

இவ்வச்சகத்தில் பணிபுரியும், மகளிரின் குழந்தைகளை பணி நேரங்களில் கவனித்துக்கொள்ள காப்பகம் உள்ளது.

மத்திய அச்சகத்திலுள்ள சிற்றுண்டிச்சாலை தொழிலாளர்களின் தேவைகளை கவனித்து வருகிறது. சென்னை மத்திய அச்சகத்திற்கு பின்வரும் பாதுகாப்பு விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.—

திட்டம் I	..	சான்றிதழ்.
திட்டம் II	..	ரூ. 1,000 (+) ஒரு சுழற் கோப்பை முதல் பரிசு.
திட்டம் III	..	ரூ. 1,000 (+) ஒரு சான்றிதழ்.

1980 ஜூலை 22]

3.2. சென்னை உயர்நீதிமன்ற கிளை அச்சகம்—இக்கிளை அச்சகம் 237 பணியாளரை நிலையாகக் கொண்டு, மூன்று முறை மாற்றுப் பணியில் உயர்நீதிமன்றக் கட்டிட வளாகத்தில் அமைந்துள்ளது. வேலை பழகுவோர் சட்டத்தின்படி நன்கு பேருக்கு இவ்வச்சகத்தில் பயிற்சி அளிக்கப்படுகிறது. உயர் நீதிமன்றத்திற்குத் தேவையான அன்றாட வழக்குப் பட்டியல்கள், வாரந்திர வழக்குப் பட்டியல்கள் ஆகியவற்றை உரிய காலத்தில் அச்சடிப்பது முதன்மையான பணியாகும். இத்துடன் இந்திய சட்ட அறிக்கைகள் (சென்னையில் நடைபெறும் வழக்குகள்) அச்சிடுவதும் இவ்வச்சகத்தின் பணியாகும். இவ்வச்சகத்தில் மூன்று பர்னிவல்வார் பெடல்' (Furnival wharfedal) அச்சு இயந்திரம், ஒரு 'பிரைம' அச்சு இயந்திரம், ஒரு 'குரோவர்' அச்சு இயந்திரம் உள்ளன.

3.3. சென்னை மத்திய சிறையிலுள்ள கிளை அச்சகம்.—குற்றவாளிகளின் நலனைக்கருதி, அச்சுத் தொழிலில் பயிற்சி அளிக்கும் நோக்குடன் மத்திய சிறையில் இவ்வச்சகம் அமைக்கப்பட்டுள்ளது. கைதிப் பணியாளர்களுடன் அச்சகப் பணியாளர்கள் 44 பேரும் இங்குப் பணியாற்றுகின்றனர். இங்குப் பணியாளர்கள் இரண்டு முறை மாற்றுப் பணியில் இயங்குகிறார்கள். இங்குப் பணிபுரியும் கைதிகள் ஒவ்வொருவருக்கும் நாள் ஒன்றுக்கு ரூ. 1 வீதம் ஊதியம் அளிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் பயிற்சி பெறும்போது ஊதியமும், சிறை விடுதலைக்குப் பின்னர் வேலை பெறும் வாய்ப்பையும் அவர்கள் பெறுகின்றனர். இங்குக் காவல் துறை, கல்வித் துறை, மற்றும் அரிசன நலத் துறைகளுக்கான படிவங்களின் ஒரு பகுதி மற்றும் பள்ளி இறுதித் தேர்விற்கான (S.S.L.C.) கூடுதல் விடைத்தாள்களில் ஒரு பகுதியும் அச்சிடப்படுகிறது. இவ்வாண்டு காகித உறைவெட்டு இயந்திரம் இவ்வச்சகத்தில் நிறுவப்பட்டுள்ளது.

3.4. சென்னை, சூளையிலுள்ள ஆனைக்காரன் தோட்டக் கிளை அச்சகம், சென்னை.—இவ்வச்சகம் 1974-ல் இருந்து வாடகைக் கட்டிடத்தில் மூன்று முறை மாற்றுப் பணியில் செயற்பட்டு வருகிறது. இங்கு 182 பெண்டிர் உள்பட 696 பணியாளர்களும், இவர்களைத் தவிர 47 வேலை பழகுபவர்களும் பணியாற்றுகின்றனர். இவ்வச்சகம் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக்குழு, காவல்துறை, மருத்துவத்துறை, வணிகவரித்துறை தொடர்பான அச்சுப் பணிகளைச் செய்து வருகிறது.

இங்குப் பணிபுரியும் பெண் ஊழியர்களின் நலனுக்கென குழந்தைகள் காப்பகம் ஒன்றும், ஓய்வுக் கொட்டகை ஒன்றும் உள்ளன. தொழிலாளர் நலனைக் கருதி ஒரு சிற்றுண்டிச் சாலை நிறுவப்பட்டுள்ளது.

[1980 ஜூலை 22

3.5. புதுக்கோட்டையிலுள்ள கிளை அச்சகம்.—இவ்வச்சகம் மொத்தம் 256 பணியாளர்களைக் கொண்டு இரண்டு முறை மாற்றுப் பணியில் செயல்படுகிறது. இவர்களைத் தவிர 17 வேலை பழகுபவர்களும் இங்கு உள்ளனர். இந்த அச்சகம் சொந்தக் கட்டிடத்தில் இயங்கி வருகிறது. இந்த அச்சகத்தில் பின்வரும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.—

1. மாவட்டங்களின் அரசிதழ்கள் (ஆங்கிலத்திலும், தமிழிலும்).

2. சென்னை உயர் நீதிமன்றம் தொடர்பான படிவங்கள்.

3. நிலைப் படிவங்கள் மற்றும் தமிழ்நாடு நிதி, கணக்கு ஒய்வு ஊதிய விதிக்கோவைகள் சம்பந்தப்பட்ட படிவங்கள் நிதி கணக்கு சம்பந்தப்பட்ட கோவைகள்.

இவ்வச்சகக் கட்டிடத்தை விரிவுபடுத்துவதற்காக, ரூ. 1.5 இலட்சம் செலவு மதிப்பீட்டிற்கு அனுமதி பெறுவதற்காகச் செயற்குறிப்பு ஒன்று அரசிடம் அனுப்பப்பட்டுள்ளது. இக்கிளை அச்சகம் 1977ஆம் ஆண்டில் மாநிலப் பாதுகாப்பு விருதுச் சான்றிதழும், முதல் பரிசு ரூ. 250-ம் மற்றும் 1978ஆம் ஆண்டுக்கான தகுதிச் சான்றிதழும் பெற்றுள்ளது. தொழிலாளர்களுக்கு விளையாட வசதியாகவும் மற்றும் பொழுது போக்க வசதியாகவும் ஒரு மனமகிழ் மன்றம் செயல்பட்டு வருகிறது.

3.6. அரசு வட்டார அச்சகம், திருச்சிராப்பள்ளி.—இந்த அச்சகம் அரியமங்கலம் தொழிற்பேட்டையில் நான்கு வாடகை இடங்களில் அமைந்திருப்பதோடு 167 பணியாளர்களையும் 12 வேலை பழகுபவர்களையும் கொண்டு இரண்டு முறை மாற்றுப் பணியில் செயல்படுகிறது. இவ்வச்சகத்தில் பின்வரும் அச்சுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன:—

1. செட்டில்மெண்ட் 'ஏ பதிவேடுகள்

2. பல துறைகளின் தலைவர்களுக்குத் தேவையான பொதுப் படிவங்களும் பதிவேடுகளும்.

இந்த வட்டார அச்சகத்திற்குப் பின்வரும் பரிசுகள் வழங்கப்பட்டன:—

1. 1978 ஆம் ஆண்டில் பணிபுரிந்த மனித உழைப்பு மணி நேரங்களுக்குச் சான்றாக இரண்டாம் பரிசு.

1980 ஜூலை 22]

2. 1978ஆம் ஆண்டில் ஏற்பட்ட விபத்தை அடிப்படையாகக் கொண்டு II-ம் திட்டத்தின் கீழ் சான்றாக மூன்றாம் பரிசு.

3.7. அரசு வட்டார அச்சகம், சேலம்.—இந்த அச்சகம் வாடகைக் கட்டிடங்களில் இரண்டு முறை மாற்றுப் பணியில் 150 பணியாளர்களையும், 11 வேலை பழகுபவர்களையும் கொண்டு இயங்கி வருகிறது.

இவ்வச்சகம், கருவூல நிலைப்படிவங்கள் அச்சடிப்பது மற்றும் சில அச்சகப் பொருள்கள் தயாரிப்பதில் முக்கியமாக ஈடுபட்டுள்ளது.

பணியாளர்களின் நலனைக் கருதி மனமகிழ் மன்றம் இயங்கி வருகிறது.

இவ்வச்சகத்திற்கு நிரந்தரமான கட்டிடங்கள் கட்டுவதற்காகச் சுமார் 3 ஏக்கர் பரப்புள்ள நிலத்தை வாங்குவதற்குரிய செயற் குறிப்புகள் பரிசீலனையில் உள்ளன.

3.8. அரசு வட்டார அச்சகம், விருத்தாசலம்.—இவ்வச்சகம் 154 பணியாளர்களையும் 11 வேலை பழகுபவர்களையும் கொண்டு இரண்டு முறை மாற்றுப் பணியில் இயங்கி வருகிறது.

இவ்வச்சகத்தின் நிர்வாகப் பிரிவு இதுவரை வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வந்தது. தற்பொழுது சொந்தக் கட்டிடத்தில் இயங்கி வருகிறது. அச்சுப் பிரிவு தற்காலிகமாக் சொந்தக் கட்டிடத்தில் இயங்கி வருகிறது. அச்சுப் பிரிவிற்கான நிரந்தரக் கட்டிடம் கட்டி முடிக்கப்படும் தருவாயில் உள்ளது.

வேளாண்மைத் துறை, கால்நடை பராமரிப்புத் துறை, நீதித் துறை, வேலை வாய்ப்புப் பயிற்சித் துறை, தேசிய மாணவர் படை, தொழில் வணிகத் துறை, பட்டுப்புழு வளர்ப்புத் துறை, வனத் துறை, புள்ளி விவரத் துறை, ஆகிய துறைகளின் படிவங்கள், பதிவேடுகள் ஆகியவையும் 'ஏ' பதிவேடுகளும் அச்சிடும் பணி இந்த அச்சகத்தில் மேற்கொள்ளப்படுகிறது. இங்கு $\frac{1}{4}$ விளிம்பு குறிப்பு, வரைவுத் தாள்கள், மற்றும் முதல்ரக கோப்புக் கூட்டும் அட்டைகள் ஆகிய அச்சகப் பொருள்கள் தயாரிக்கப்படுகின்றன.

மேலும், நான்கு HMT இயந்திரங்கள் ரூ. 13 இலட்சம் செலவில் வாங்க அரசு அனுமதி அளித்துள்ளது. ஒரு சிலிண்டர் அச்சடிக்கும் இயந்திரம் வாங்குவதற்கான வழங்கு ஆணை (supply order) கொடுக்கப்பட்டுள்ளது. கம்பெனியிடமிருந்து இந்த இயந்திரம் எதிர்பார்க்கப்படுகிறது. பணியாளர்களின் நலனுக்காக பணியாளர் சிக்கன கடன் வழங்கும் சங்கம் ஒன்று இவ்வச்சகத்தில் செயல்பட்டு வருகிறது.

3.9. அரசு வட்டார அச்சகம். மதுரை.—இந்த அச்சகம் 334 பணியாளர்களைக் கொண்டு இரண்டு முறை மாற்றுப் பணியில் சொந்தக் கட்டிடத்தில் செயல்பட்டு வருகிறது.

இவ்வச்சகத்தில், வருவாய்த் துறையின் நிலைப்படுத்தப்பட்ட படிவங்கள், பதிவேடுகள், சிறைத் துறை, இந்து சமய அற நிலையத் துறை ஆகியவற்றிற்கு தேவையான படிவங்கள், பதி வேடுகள் ஆகியவைகள் அச்சிடப்படுகின்றன. தொழில் பழகுபவர்கள் பதின்மூன்று பேருக்கு இவ்வச்சகத்தில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

தொழிலாளர்களின் நலனுக்காக மதுரை அரசு இராஜாஜி மருத்துவ மனையிலிருந்து மருத்துவர் ஒருவர் வாரம் ஒரு முறை இவ்வச்சகத்திற்கு வந்து பணியாளர்களின் உடல் நலனைச் சோதித்துப் பார்ப்பதற்குரிய செயற்குறிப்புக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. தொழிலாளர்களுக்கு குடிதண்ணீர் வழங்குவதற்கு ஏதுவாக மதுரை மாநகராட்சிக்கு ரூ. 31,600 செலுததப் பட்டுள்ளது. பணியாளர்களின் நலனுக்காக மனமகிழ் மன்றம் ஒன்று உள்ளது.

4. அரசு வெளியீடுகள் விற்பனை நிலையம். அண்ணா சாலை சென்னை.—அரசு வெளியீடுகள், அண்ணா சாலையில் உள்ள அரசு வெளியீட்டு விற்பனை நிலையம் மூலமாகவும், உயர் நீதி மன்றக் கட்டிடத்திலுள்ள கிளை விற்பனை நிலையத்தின் மூலமாகவும் பொதுமக்களுக்கு விற்பனை செய்யப் படுகிறது. மேலும், அரசு வெளியீடுகள் அதிகாரம் அளிக்கப் பட்ட 49 முகவர்கள் மூலமாகவும் விற்கப்படுகின்றன. சென்னை நகரில் 13 முகவர்களும், மாவட்டங்களில் 28 முகவர்களும் பிற மாநிலங்களில் 8 முகவர்களும் உள்ளனர்.

விற்பனை நிலையத்தில் 54 பேர் பணி புரிகின்றனர். இந்த விற்பனை நிலையம் ரூ. 3.4 இலட்சம் மதிப்புள்ள வெளியீடுகளை 1978-79ஆம் ஆண்டில் விற்பனை செய் துள்ளது. கிளை விற்பனை நிலையம் மேற்கண்ட காலத்தில் ரூ. 42,000 மதிப்புள்ள வெளியீடுகளை விற்பனை செய்துள்ளது.

5. எழுதுபொருள் பிரிவு.—எழுதுபொருள்—அச்சுத்துறையின் எழுதுபொருள் பிரிவில் 328 பேர் பணியாற்றுகின்றனர். மைய முகவரமைப்பாக அப்பிரிவு இருந்து அரசு அலுவலகங் களுக்குத் தேவையான, காகிதம், அட்டைகள், எழுதுபொருள் தட்டெழுத்துப் பொறிகள், படிப்பெருக்கிகள், கணக்கிடும் பொறிகள் ஆகியவற்றை வாங்கித் தேவைக்கேற்ப வழங்கி வரு கிறது. மேலும் சென்னை மாநகரில் தலைமைச் செயலகத் திலும், துறைத் தலைவர்கள் அலுவலகங்களிலும் உள்ள கடை நிலை ஊழியர்களுக்கும், மாநகரிலுள்ள மருத்துவ

1980 ஜூலை 22]

மனைகளில் பணிபுரியும் குற்றேவலர்களுக்கும் சீருடைகள் வழங்குகிறது. அரசு அலுவலகங்களுக்கு இலவசமாகவும், வணிக அடிப்படையில் இயங்கும் அரசுத் துறைகளுக்கும், உள்ளாட்சி மன்றங்களுக்கும் உரிய தொகையை பெற்றுக் கொண்டும் எழுது பொருள்கள் வழங்கப்படுகின்றன.

6. பணியாளர்களுக்கான வசதிகள்.—பணியாளர்களுக்குத் தேவைப்படும் வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அவைகளில் சில கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

6.1. சென்னை, தண்டையார்பேட்டையிலுள்ள அரசு அச்சகப் பணியாளர் குடியிருப்பில் 300 அங்கணங்கள் உள்ளன. இந்த குடியிருப்பைச் சுற்றி ரூ. 2.58 இலட்சம் செலவில் சுற்று சுவர் கட்டும் பணியும், ரூபாய் 1.06 இலட்சம் செலவில் எல்லா அங்கணங்களுக்கும் மின் விசிறி பொருத்தும் வேலையும் நடைபெற்று வருகின்றன.

6.2. ஒரு கிணறும், நீரேற்றுக் குழாய் அறையும் மைய மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டியும், 300 குடியிருப்புக்குத் தண்ணீர் வினியோகக் குழாய்களும் ரூ. 1.07 இலட்சம் செலவில் அமைத்துக் கொடுக்கப் பட்டுள்ளது. 'சி' பிரிவு குடியிருப்புக்கு கம்பி வலை பொருத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

6.3. சென்னை மைய அச்சகத்தில், பணியாளர்களின் நலனுக்காக மேலும் இரண்டு குளிர்ந்த குடி நீர் வழங்கும் கருவிகள் அமைக்கப்பட்டுள்ளன.

6.4. மைய அச்சகத்திலுள்ள மருந்தகத்தைச் சேர்ந்த, மருத்துவ அலுவலர் வாரம் ஒரு முறை எழுதுபொருள் கிடங்கு மற்றும் நகரிலுள்ள கிளை அச்சகங்களுக்குச் சென்று அங்கு பணிபுரிவோருக்குத் தக்க மருத்துவச் சிகிச்சை அளித்து வருகிறார். பணியாளர்களுக்கு மட்டும் இன்றி அவர்கள் குடும்பங்களுக்கும் மருத்துவச் சிகிச்சை ஆண்டு முழுவதும் அளிக்கப்படுகிறது.

6.5. அரசு மைய அச்சகம், அதன் கிளை அச்சகங்கள் ஆகிய அனைத்திலும் பணிபுரியும் எல்லாப் பணியாளர்களுக்கும் பன், டீ இவற்றிற்குப் பதிலாக ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 7.50 வீதம் வழங்கப்பகிறது. ஈயம் உருக்கும் பகுதியில் பணிபுரியும் பணியாளர்களுக்குப் பணியின்போது ஏற்படும் கெடுதியிலிருந்து பாதுகாப்பு அளிக்கப் பாலுக்குப் பதிலாக ஒரு நாளைக்கு ஒருவருக்கு 40 காசுகள் வீதம் ரொக்கப்படியும் உயிர் ஊட்டச் சத்து மாத்திரைகளும் வழங்கப்படுகின்றன.

[1980 ஜூலை 22

6.6. உடல் நல ஆய்வாளர் ஒருவர் நகரிலுள்ள அச்சகங்களின் சுகாதார நடவடிக்கைகளைத் தகுந்த முறையில் கவனித்து வருகிறார்.

6.7. பணியாளர் நல நிதியிலிருந்து விளையாட்டுகள், நல நடவடிக்கைகள், குடியரசு நாள் விழா, விடுதலை நாள் விழா, ஆயுத பூஜை முதலியன கொண்டாட இந்நிதியிலிருந்து ஆண்டு தோறும் எழுதுபொருள்-அச்சுத் துறையின் அனைத்துப் பிரிவுகளுக்குமாகத் தொகை வழங்கப்படுகிறது. விளையாட்டுச் செலவினங்களுக்காக கீழ்க்கண்டவாறு நிதி அளிக்கப்பட்டது:—

	ரூபாய்.
மைய அச்சகம்	800
புதுக்கோட்டை கிளை அச்சகம் ..	300
திருச்சி வட்டார அச்சகம் ..	300
சேலம் வட்டார அச்சகம்	300
விருத்தாச்சலம் வட்டார அச்சகம் ..	300
மதுரை வட்டார அச்சகம்	800

6.8. மைய அச்சகத்தில் செயல்படும் தமிழ்நாடு அரசினர் எழுதுபொருள்-அச்சுத் துறை தொழிலாளர் கூட்டுறவு சங்கம், பணியாளர்களுக்குத் தேவையான கடன் வசதியை அளித்து வருகிறது. இதன் உறுப்பினர்கள் 2,527 பேர் ஆவர். இதன் பங்கு மூலதனம் ரூ. 17 இலட்சம் ஆகும். வழங்கிய கடன் தொகை ரூ. 221 இலட்சம் ஆகும். இது, நடப்பு ஆண்டில், தனது உறுப்பினர்களுக்கு, அவர்களின் பங்குத் தொகைகளின்மேல், 9 சதவீத ஆதாயப் பங்குத் தொகையை அளித்துள்ளது.

6.9. மைய அச்சகத்திலுள்ள கூட்டுறவுப் பண்டகசாலை பணியாளர்களுக்கு கட்டுப்பாட்டு ஏற்பாட்டின் கீழ்வரும் பொருட்கள் உட்பட இன்றியமையாத பண்டங்களை நியாய விலையில் அளிப்பதின் மூலம் பயனுள்ள பணியாற்றி வருகிறது. இதில், 1,309 உறுப்பினர்கள் உள்ளனர். உயரளவு ரூ. 200 வரை என்பதற்கு உட்பட்டு, உறுப்பினர்கள் தங்களது பங்கு மூலதனத்தின் பேரில் நான்கு முறை கடனாகப் பொருட்காளை வாங்கிக்கொள்ள 1979 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களிலிருந்து அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

6.10. பணியாளர்கள் இறக்க நேரிடின், அன்னாரின் உடனடி ஈமச் சடங்குக்குரிய செலவிற்காக அவர்களின் குடும்பத்திற்கு நல நிதியிலிருந்து ரூ. 100 வழங்கப்படுகிறது. இது, அவர்களது இடர்பாட்டைக் ஓரளவிற்குக் குறைக்கும்.

1980 ஜூலை 22]

6.11. பணியாளர்களின் குறைகளை உரிய நேரத்தில் நிவர்த்தி செய்வதற்கென, இத்துறை தனிப்பட்ட கவனம் செலுத்துகிறது. இயக்குநர் அவர்கள் தொழிலாளர்களின் குறைகளை நேரில்கேட்டு நிவர்த்திக்க ஆவன செய்வதற்கென்றே ஒரு குறித்த நேரத்தை ஒதுக்கியுள்ளார்.

7. பொது :

7.1. தொழிலாளர் கல்வி திட்டம் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டது. சென்னை வட்டார தொழிலாளர் கல்வி இயக்குநர் அலுவலகத்தில் தொழிலாளர்-ஆசிரியர் பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ள அனுப்பப்பட்டு வருகின்றனர். தொழிலாளர்-ஆசிரியருக்கும், இக் கல்வி வகுப்பில் கலந்துகொள்ளும் தொழிலாளர்-பயிற்சியாளருக்கும் ஒட்டு மொத்தத் தொகை வழங்கப்படுகிறது. பயிற்சி காலத்தினபோது அவர்கள் பணிக்கு வராதிருக்கும் காலம் ஊதியத்துடன் கூடிய பணி நாளாக கருதப்படுகிறது.

7.2. குடும்பங்களுக்குத் துணை வருவாய் கிடைப்பதற்கு மகளிருக்கு உதவி புரியும் நலத்திட்டமாக புத்தகங்கள் கட்டுதல் மேலுறைகள் தயாரித்தல் ஆகிய பணிகள், சென்னை மாநகரிலுள்ள சமூக நல நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

7.3. கதர்-கிராமத் தொழில்களை மேம்படுத்தும் நோக்கத்துடன், கதர்-கிராமத் தொழில் வாரியத்திலிருந்து ஈச்சம் பாய்கள், சோப்புகள், கதர் துணிகள் முதலியவைகள் கொள்முதல் செய்யப்படுகின்றன.

7.4. தொழிலாளர்களால் அமைக்கப்பட்ட சென்னை அரசு அச்சகக்குழு (Government Press Party) அதன் உறுப்பினர்கள் இறக்க நேரிடின், அன்னாரின் குடும்பத்திற்குத் தேவையான அவசர உதவிகளைச் செய்து வருகிறது. இதில் 2,000 உறுப்பினர்கள் உள்ளனர். இக் குழு இவ்வாண்டு இறந்த தொழிலாளர்களைச் சார்ந்து உள்ளவர்களுக்கு சுமார் 80,000 ரூபாயை வழங்கியுள்ளது.

நிர்வாகத்திற்கும் தொழிலாளர்களுக்குமிடையே சுமூகமான உறவு ஏற்பட்டிருக்கிறது. இவ்வச்சகத்தில் நிலவும் சுமுகமான சூழ்நிலை, இவ்வச்சகம் நன்முறையில் நடைபெறச் செய்கிறது. இங்குப் பணிபுரியும் தொழிலாளர்கள், கடந்த சனவரி 1980 மற்றும் மே 1980-ல் நடந்து முடிந்த தேர்தலுக்கான வாக்குச் சீட்டுக்களை அச்சடித்துக் குறித்த காலக் கெடுவுக்கு முன்னரே அளிப்பதற்கு முழு முயற்சியும் எடுத்து அப்படியே முடித்தனர். இது ஒரு சாதனையே. இங்கு நிலவி வரும் தொழில் அமைதி அனைவரும் அறிந்த நடைமுறை உண்மையாகும். தொழிலாளர்களின் உற்சாகமான ஒத்துழைப்பு போற்றுதற்குரியது.